# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1கொரி. 2:15

**VOLUME - 9 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 11**
**NOVEMBER 2025 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333**
e-mail : **jamakaran@yahoo.com. jaamakkaran@gmail.com** Fax: 0427- 2386464. www.jamakaran.com

*அன்பான ஜாமக்காரன் வாசகர்களுக்கு*

**வாழ்த்து கூறுகிறேன்,**



இந்த மாதமும் ஆவிக்குறிய நல்ல செய்திகளை வாசகர்கள் பிரயோஜனத்துக்காக தொடுத்து வெளியிடுகிறேன்.

நீங்கள் எழுதிய ஜெப குறிப்புகளுக்காக தொலைப்பேசியில் கூறிய ஜெப குறிப்புகளுக்காகவும் நான் தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

நீங்கள் அனுப்பிய எல்லா பண உதவிகளுக்காக நன்றி கூறுகிறேன்.

கர்த்தரின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

**-Dr. புஷ்பராஜ்**

## ஜாமக்காரன்

கடந்த 50 ஆண்டுகளாக **ஜாமக்காரன்** பத்திரிகையை நடத்திக்கொண்டு இருக்கிறேன். என் வாசகர்களை **எச்சரிப்பதும், ஆபத்துகளையும் போலி ஊழியர்களையும் அடையாளம் காட்டுவதும்,** தவறான உபதேசங்களை குறிப்பிட்டுக்காட்டி **அறிவிப்பதும்** தான் **ஜாமக்காரனின் வேலை** ஆகும்.

# NOVEMBER- 2025

கர்த்தர் எனக்கு கொடுத்த வேலையை அல்லது **ஊழியத்தை** இதுவரை செவ்வனே செய்து வந்தேன். இது எழுதும்போது **என் வயது 86**. இதற்கு மேலும் **ஜாமக்காரன் தொடருமா** என்று **சந்தேகிக்கிறேன்**. என் **சரீர பலவீனம்** காரணமாக இப்படி எழுதுகிறேன்.

இப்போது பல **புதிய வாசகர்கள், புதிய தலைமுறைகள்** ஜாமக்காரனை பெற்று வாசிக்கிறார்கள். அவர்களை **எச்சரிக்க** சில **பழைய விஷயங்களை** இம்மாத ஜாமக்காரனில் குறிப்பிட விரும்புகிறேன். திரும்ப திரும்ப **ஏன் பழைய விஷயங்களை** எழுதுகிறீர்கள் என்று பழைய வாசகர்கள் சலிப்படையலாம். என்ன செய்வது இன்னும் பல **புதிய கிறிஸ்தவர்களும். புதிய தலைமுறை** மக்களும் சரியானதை அறிந்து கொள்ளவேண்டுமே ! அதற்காகத்தான் இம்முறையும் அவைகளை எழுதுகிறேன்.

**பிரச்சனை என்ன ?**

**சில மாதங்களுக்கு முன் சில FMPB மிஷனரிகளும் FMPB ஜெபக்குழு தலைவர் ஒருவரும் என்னிடம் கேட்ட கேள்விக்கான** பதில்தான் இது?

சில மாதங்களுக்கு முன் FMPB மிஷனரிகள் கூட்டத்துக்கு **இயேசு அழைக்கிறார்** குடும்பமான **Dr. பால் தினகரன்,** தம்பி **சாம் பால்** ஆகியவர்கள் அழைக்கப்பட்டு **மிஷனரிகள்** மத்தியில் FMPB தலைவர்கள் பேச வைத்திருக்கின்றனர்.

பிரசங்கம் செய்த இவர்களுக்கு **மிஷனரி ஊழியம்** பற்றி என்ன தெரியும் ? இவர்களை பற்றிய **பல கோடி** ரூபாய் பதுக்கி வைத்தது பற்றி விசாரனை, தங்க கட்டிகள் பதுக்கி வைத்தது ஆகியவைகளை **பற்றிய விவரம் அறிந்த** மிஷனரிகள் இவர்கள் பிரசங்கிக்கும்போது, பிரசங்கத்தை கவனிப்பார்களா? பல கோடிகள் பதுக்கி வைத்ததையும், தங்க கட்டிகளையும் நினைவு கூறுவார்களா? மாட்டார்களா?

**இந்த பிரச்சனைக்கு காரணம்** FMPB மிஷனரிகள் பெரும்பாலும் நன்கு இரட்சிக்கப்பட்டவர்களாகும். அவர்கள் **இயேசு அழைக்கிறார்** ஊழிய **ஏமாற்று விவரங்களை** அறிவார்கள். ஆனால் FMPB யில் **தலைவர்களில்** யாரோ ஒருவர் **இயேசு அழைக்கிறார் ஸ்தாபனத்தின் பரம விசிரியாக** இருப்பார் என்று நினைக்கிறேன். அவர்கள்தான் இந்த பிரச்சனைக்கெல்லாம் காரணம், இப்படிப்பட்டவர்களின் ஆவிக்குரிய ஜீவியத்தை குறித்தே சந்தேகமாக இருக்கிறது.

நல்ல **சாட்சியுள்ள, வசன** அடிப்படையில் வாழும் பிரசங்கிகளுக்கா பஞ்ஜம்.

மிஷனரிகள் **கஷ்டங்களை** அனுபவிப்பதையும் இவர்கள் அறிவார்கள், அவர்கள் வாழும் மிஷனரி பணித்தளத்தையும், அவர்கள் வாழும் வீட்டையும், அவர்களுக்கு கிடைக்கும் மிக மிக குறைந்த சம்பளத்தில் எப்படி பிள்ளைகளை வளர்ப்பார்கள் என்பதையும் பிள்ளைகளின் மேல் படிப்புக்கு, திருமண நிகழ்வுக்கு யாரிடம் பணம் கேட்பார்கள்?

இப்படிப்பட்ட மிஷனரிகளிடம் **பணக்கார ஸ்தாபன** தலைவர், அதாவது **இயேசு அழைக்கிறார்** ஸ்தாபன தலைவர்கள் என்ன ஆலோசனை கூறியிருப்பார்கள்!

**விஷ்வவானி** மிஷனரி ஸ்தாபனத்தின் தலைவரும் மிஷனரியுமான சகோ. **எமில் ஜெபசிங்** அவர்களின் மகளை காருண்யா கல்லூரியில் **டொனேஷன்** கொடுக்காமல் **சேர்க்க முடியாது** என்றதால் பெரும் எதிர்பார்ப்போடு காத்திருந்த மகள் கல்லூரியில் சீட் கிடைக்காததால் மனம் சோர்வுற்று சில மாதங்கள் பலவீனப்பட்டார். குடும்பமே சோர்வுற்றிருந்த நேரத்தில் அவர் மகளுக்கு வெல்லூர் **CMC மெடிக்கல் கல்லூரியில்** இடம் கிடைத்தது.

**காருண்யா கல்லூரி** பனிதபோது **இளம்பங்காளர்** திட்டத்துக்கு பணம் கொடுத்தவர்களுக்கு **படிப்பு இலவசம்** என்று விளம்பரப்படுத்தி **மக்களை இவர்கள் ஏமாற்றினார்களே!** இப்போது டொனேஷன் கொடுப்பவர்களுக்கு தான் சீட் என்றார்கள்.கர்த்தரோ **சகோ. எமில் ஜெபசிங்** மகளை மிக உயர்ந்த படிப்பை எந்த **டொனேஷனும்** கொடுக்காமல் படிக்க வைத்தாரே எத்தனை கிருபை! இப்படிப்பட்டவர்களை **மிஷனரிகளுக்கு** ஆலோசனை கூற மிஷனரி கூட்டத்தில் **பேச வைத்தவர்களை** குறித்து என் சொல்ல!

### புதிய தலைமுறை வாசகர்களுக்கு இவர்களின் ஏமாற்று செய்தியை இன்னும் கூறுவேன்

அமலாக்க துறையும், **வருமான வரி** துறை ஆகியவர்களிடம் இவர்கள் **பிடிபட்டதை** மற்றவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

இவர்கள் **கனடா** நாட்டுக்கு சென்றார்களாம். **கனடா** விமான நிலையத்தில் இறங்கி ஒரு டாக்சியில் போனார்களாம் . விமான நிலையத்தை விட்டு இறங்கிய உடன் இவர்கள் **எங்கு செல்வது?** எப்படி செல்வது? என்று கலங்கிப்போனார்களாம். இதில் அவர்களின் எழுத்தில் கவணிக்க வேண்டியது. **ஒரு நாட்டுக்கு செல்வதானால்** அந்த குறிப்பிட்ட நாட்டில் வாழும் யாராவது **அழைத்திருக்க** வேண்டும். அழைத்தவரின் **கடிதம்**, விலாசம் இல்லாமல் இவர்கள் **எப்படி** விசா பெற்றிருக்க முடியும்?

லாட்ஜில் தங்கியபோது இவர்கள் வெளியில் செல்ல **கார்** வேண்டும் என்று பாலின் மனைவி **ஏஞ்சலின்** ஜெபித்தார்களாம். ஒரு தூதன் வந்து என்ன கார் வேண்டும் என்று கேட்டானாம். உடனே மறு அறையில் விளம்பர பத்திரிகைகளை எடுத்து அதில் ஒரு குறிப்பிட்ட கார் தான் வேண்டும் என்றாராம், மறுநாளே அந்த புதிய கார் லாட்ஜின் முன் நின்றதாம்.

வெளி நாட்டில் **கையில் காசில்லாத** நிலையில் **புது மாடல் காருக்கு** முன்பனம் அல்லது சிபாரிசு இல்லாமல் யார் புத்தம் புது கார் கொடுப்பார்கள்?.எல்லாம் **பொய்! நூற்றுக்கு நூறு பொய்!**

வெளிநாட்டில் லாட்ஜில் தங்க அதுவும் **ஸ்டார் ஓட்டலில்** மாத கணக்கில் தங்க **கோடி** கணக்கில் பணம் வேண்டும் கையில் காசில்லை என்ற இவர்களுக்கு **கோடிகள்** எப்படி வந்தது?

பால் தினகரனின் மனைவி திருமதி.ஏஞ்சலின் பேசிய ஒரு வீடியோவில் அவர் கூறுகிறார். எங்களை அதாவது **இயேசு அழைக்கிறார்** ஊழியத்தை **பணக்கார ஊழியம்** என்கிறார்கள். உண்மையில் எங்கள் நிலை மோசமானது. எங்கள் வங்கி கணக்கில் **பேங்க்பேலன்ஸ்** 0 என்று கையில் வரைந்து காண்பிக்கிறார். மேலும் உங்களுக்கு நான் கூறுவதில் சந்தேகம் இருக்குமானால் என் வீட்டுக்கு வாருங்கள் எங்கள் பேங்க் பாஸ்புக் காட்டுகிறேன். அதில் **“0” பேலன்ஸ்** இருப்பதை காணலாம் என்றார். இது **துணிகர பொய்** எந்த ஒரு வங்கியிலும் குறைந்தது 5000 ரூபாயாவது பேலன்ஸ் இருக்க வேண்டும். இவர்களுக்கு பல வங்கிகளில் கணக்கு உண்டு. எந்த வங்கியிலும் **0 பேலன்ஸ்** இருக்கவே இருக்காது. இது பொய்யிலும் வடிகட்டின பொய்யாகும்.

அன்பானவர்களே! இப்படிப்பட்ட பொய் பேசும் ஊழியர்கள் கர்த்தரின் பார்வையில் அருவருப்பானவர்கள் ஆகும். மேலும் இவர்கள் **ஊழியம்** முழுவதும் **பொய்யாகத்தானே** இருக்கும்!

## ஜெபத்தில் பொய்

இப்படிப்பட்ட இவர்கள் ஜெபத்தில் **பெயர்களை** கூறுவதும், **வியாதியின்** பெயரை கூறுவதும் பொய்தானே!

## இவர்களை பின்பற்றுபவர்கள்

ஜெபத்தில் பெயர்களை அழைக்கும் ஊழியக்காரர்களில்நாலுமாவடி **மோகன் லாசரஸ் அவர்களும் ஒருவர்.**

**ஆலன் பால், சகோ. ஸ்டிபன்** இப்படி பலர் பெயர்கள் பட்டியல் இருக்கிறது.

சகோ. **ஆலன்பால்** பாலஸ்தீன நாட்டில் **கொல்கதா மேட்டில்** இயேசு சிலுவையில் அறைந்த இடத்தில் **எண்ணெய்யை** வைத்து ஜெபித்து அதை இந்தியா எடுத்து வந்து **சிறு குப்பிகளில்** ஊற்றி கூட்டங்களில் கலந்து கொண்டவர்களுக்கு ஆளுக்கொரு குப்பி வீதம் கொடுத்து இது இயேசு மரித்த **கொல்கதா மேட்டில்** வைத்து ஜெபித்ததாகும். இது **சகல ரோக நிவாரணியாகும்**. எப்படிப்பட்ட வியாதிக்கும் இந்த எண்ணெய் வைத்தால் சுகம் கிடைக்கும்.

ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு இந்த எண்ணெய்யை கொடுக்க வேண்டுமானால் எவ்வளவு எண்ணெய் இவர்கள் கொண்டு போயி இருப்பார்கள்? இப்படிப்பட்ட பொய்களை கூறி மக்களை ஏமாற்றும் இவர்களை யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை. இவர்களுக்கு கூடும் கூட்டமோ ஏராளம். இவர்களை நம்பும் மக்கள் ஏராளம்.இதற்கெல்லாம் மூல காரணம் **இயேசு அழைக்கிறார்** குடும்பம் ஆகும். மேலே கூறியவர்கள் கூறும் **பொய்கள் எல்லாம் இயேசு அழைக்கிறார்** குடும்பத்திலிருந்து கற்றதாகும்.

இவைகளை ஜாமக்காரன் **புதியவாசகர்களும், புதிய தலைமுறை** கிறிஸ்தவர்களும் அறிய வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன்.

இப்படிப்பட்ட சாட்சியில்லா **பணக்கார ஊழியர்கள்**FMPB மிஷனர்களுக்கு என்ன பிரசங்கித்திருப்பார்கள்?

**ஊழிய வாசல்கள் அடைக்கப்பட்டது**

**இயேசு அழைக்கிறார் ஊழியங்களை** இனியாரும் ஊக்குவிக்க கூடாது என்று தென் இந்தியா மாநிலங்களான **கர்நாடகா, கேரளா, ஆந்திரா, இலங்கை, தமிழ்நாடு** முழுவதும் CSI சபையில் இயேசு அழைக்கிறார் ஊழியங்களை அனுமதிக்க கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

இவர்கள் **(இயேசு அழைக்கிறார்)** பொது கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தார்கள். இவர்கள் சொந்த ஊரான திருநெல்வேலியில் அந்த பொது கூட்டத்தை நடத்தினார்கள். கூட்டம் பெரும் தோல்வியில் முடிந்தது.

மேடையில் **பிஷப்** இல்லை **ஆயர்கள்** யாரும் இல்லை. சொந்த பணத்தில் நடந்த இந்த கூட்டம் பெரும் தோல்வியை சந்தித்தது. எல்லா ஊழிய வாசல்களும் அடைப்பட்ட நிலையில் தான் FMPB மிஷனரி ஸ்தாபனம் மூலமாக தமிழ்நாட்டுக்குள் நுழைய முயற்சித்தார்கள் அதற்கு FMPB மிஷனரி ஸ்தாபன தலைவர்கள் உதவினர். அதுவும் தோல்வியில் முடிந்தது.

ஆகையால் **புது வாசகர்களுக்கும் புதிய தலைமுறை வாலிபர்களுக்கும்** நான் அறிவிப்பது எப்படிப்பட்ட ஊழியங்களை தாங்கவேண்டும் என்பதையும் வேத வசன அடிப்படையில் பிரசங்கிக்கும் ஊழியர்களையும் அவர்கள் செய்திகளையும் கேளுங்கள்.

இப்படி நீங்கள் ஜாக்கிரதையாக நிதானித்து அறிந்து கொள்ளுங்கள்.

ஜாமக்காரன் வேலையை என் இந்த கட்டுரை மூலம் நிறைவேற்றினேன். மற்ற என் எச்சரிப்பு கட்டுரையும் இம்முறை வெளிவருகிறது.

**ONLINE BANKING (NEFT)**

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**



Sis. **சாந்தி பொன்னு**

சகோதரி **சாந்திபொன்னு** அவர்களை 50 வருடங்களாக அறிவேன். மிகச்சிறிய வயது பெண்ணாக இருக்கும்போதே சிறுபிள்ளைகள் மத்தியிலும், வாலிப பெண்கள் மத்தியிலும் ஊழியம் செய்தவர். இலங்கை சூழ்நிலை, குடும்ப சூழ்நிலை காரணமாக திருமணம் செய்யாமல் ஊழியம் செய்து வருகிறார். இவருக்கு இளம் வயதிலேயே ஆவிக்குறிய செய்திகளை எழுதும் தாலந்து உண்டு. **இலங்கை சத்தியவசன** ஸ்தாபனத்தார் இவரை தங்கள் பத்திரிக்கைகளில் கட்டுரை எழுத ஊக்குவித்தனர். அதோடு **அனுதின அப்பம்** தியான புத்தகத்திற்கான தியான செய்திகளை எழுத ஊக்குவித்தனர். இவர் எழுத்து பலருக்கு பிரயோஜனமாகவும் ஆறுதலாகவும் இருந்தது.

இவரை தொடர்ந்து உபயோகிக்கும் **சத்தியவசன** நிலையத்தினரை வாழ்த்துகிறேன். சகோதரி **சாந்தி பொண்ணு** அவர்களை ஜாமக்காரன் வாழ்த்துகிறது. கீழே வாசிக்கும் கட்டுரையும் சாந்தி பொண்ணு அவர்கள் தொகுத்து எழுதியதாகும்.

– ஜாமக்காரன்

# முதுமை தேவன் அருளும் ஈவு

– நன்றி இலங்கை சத்தியவசனம்



இலங்கை தேசத்தில் 3,5 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று ஜனவரி 2024ல் எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்புக் கூறுகிறது. அதாவது ஏறத்தாழ மக்கள் தொகையில் 12.3 விழுக்காடு மக்கள் மூத்தோர்கள். இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவதை மறுக்க முடியாது. மேலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் நமது தேசத்தில் மூத்த குடிமக்களாக கருதப்படுகின்றனர். ஆனால் 60-80 வரையுள்ள வயதினரை அதற்குமேல் வாழுகிறவர்களை எப்படி அழைப்பது? பரிசுத்த தோகமம் இவர்களுக்கு ஒரு அழகான பதத்தை அருளியிருக்கிறது. அதுதான் **விருதாப்பியம்**

**ஈசாக்கு** கிதியோன் **தாவீது** இவர்கள் தங்கள் **விருத்தாப்பியத்தில்** மரித்ததாக எழுதப்பட்டுள்ளது. இது மிகவும் நீண்ட ஆயுசுள்ள ஈசாக்கு மரிக்கும்போது **நூற்றெண்பது** வயது. மூப்புபெய்துவது என்றாலே உலகம் அதனைக் கண்ணோக்கும் விதமே வேறு, **முகத்தின் சுருக்கங்கள்,** சமநிலை இழந்த **நடை,** பெலம் குன்றிய **நிலை,** நடுங்கும் **கரங்கள்,** பார்வை **குறைவுபட்ட கண்கள்,** நரைத்த **தலைமுடி** இவற்றைத்தான் உலகம் பார்க்கிறது. மூப்பெய்துவதை இன்று யாரும் விரும்புவதில்லை. பெலம் இருக்கும் போதே மரித்துவிட வேண்டும் என்று ஏங்குகிறவர்கள் பலர். ஏனெனில் வயது முதிர்ந்தவர்களை இந்த சமுதாயம் தனக்குப் **பாரமாக** பாரிய பொறுப்பாக, சில சமயங்களில் **தொந்தரவாகவும்** பார்க்கிறது. இன்று எத்தனை மூத்தோர்கள் பல காரணங்களால் தனித்து விடப்பட்டவர்களாக **முதியோர் இல்லங்களிலும்** வீடுகளிலும் வாழுகிறார்கள். **சாவு வராதா** என்று அலுத்துக்கொள்கிறவர்கள் அநேகர். எனக்கு மிகவும் வயதாகிவிட்டது . இனி என்னால் யாருக்கும் பயன் ஏதவுமில்லை. என் பெலவிவீனம் பிள்ளைகளுக்கோ மற்றவர்களுக்கோ **பாரமாகிவிடக் கூடாது** என்று நான் விரும்பினாலும் அது நடக்குமா ? இப்படியாக 83 வயது நிறைந்த ஒரு தாயார் கூறியபோது அவர் கண்கள் குளமாகிவிட்டிருந்தது. முதுமை என்பது **ஆசீர்வாதமானது** என்பதை உலகம் ஏற்காது. ஆனால் அது தேவன் மனிதனுக்கு அருளுகின்ற **உன்னதமான ஈவு** என்று பரிசுத்த வேதாகமம் நமக்கு எடுத்துரைத்திருக்கிறது.

### மூப்பின் தவிப்பு

உண்மைதான், இன்று அதிகமான மூத்தோர்கள் **சரீர ரீதியாக** பாதிப்புக்களைச் சந்தித்திருக்கிறார்கள். **பராமரிக்க தகுந்தவர்கள் இல்லாமல்** கஷ்டப்படுகிறார்கள். இது யாருடைய தப்பு? மறுபுறத்தில் இவர்கள் **ஆத்தும** ரீதியாகவும் பாதிப்படைகிறார்கள். **தனிமை,** பிள்ளைகளால் **ஒதுக்கப்படுதல்.** அன்பிற்கும் அரவனைப்புக்குமான ஏக்கம், விரும்பிய உணவு கிடைக்காமையால் தங்கள் வாழ்வை இழந்து விட்ட **பரிதாப உணர்வு** என்று பல. ஒரு காலத்தில் அவர்கள் முன்னெடுத்து சென்ற அவர்களுடைய குடும்பம் இன்று **கைமாறி** பிள்ளைகள் **சொல்லுவதை** கொடுப்பதை ஏற்க வேண்டிய நிலை மிகவும் கடினமானது.

அன்பின் மூத்த தகப்பன்மாரே, தாய்மாரே, உங்கள் பெறுமதி உங்களுக்குத் தெரியுமா? **முதுமை** என்பது நமது **ஆண்டவரை** அதிகம் இறுகப் பற்றிக்கொள்ளும் காலம் ! பெலம் பெலவீனம் இவற்றில் **பெலம்** என்பது அவரவர் சரீரநிலை வயது நிலை சகநிலைகளைப் பொறுத்தது. ஆனால் பெவீனம் என்பது பெலனற்றுப்போன நிலையே அல்ல. பலவீனம் என்பது பலம் குன்றிய நிலை மாத்திரமே. ஆகையால் நம்மால் எதுவும் முடியாது என்று நம்மை நாமே ஒதுக்கிவிடக்கூடாது. விடியற்காலை 3 மணிக்கு எழுந்திருந்து **முழங்கால்படியிட்டு** ஜெபிக்கின்ற 80 வயதுக்கும் மேற்பட்ட தாய்மார், தகப்பன்மார் நானறிவேன். இவர்களுக்கு எங்கிருந்து இந்தப் பெலன் வந்தது?

மனித வாழ்வில் ஒவ்வொரு பருவத்துக்கும் ஒவ்வொரு காலம் உண்டு. **வயது முதிரும் காலம்**

என்பது எல்லாப் பருவத்திலும் மேன்மையானது. அது தேவனையும் அவருடைய பெலத்தையும் அதிகமதிகமாக அனுபவித்து அவரையும் அவர் பெலத்தையும் நம்மில் முழுதாகத் தரித்துக்கொள்ளும் காலம். முதுமையின் பெலவீனம் என்பது. தேவாதி தேவனுடைய பெலம் நம்மில் ஒளிர்விடும் காலம். இது அளப்பெரிய ஆசீர்வாதம் இல்லையா? பவுலுக்கு சரீரத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டதாகவும், அதை நீக்கிப்போடும்படி அவர் மூன்று விசை ஜெபித்ததாகவும் நாம் வாசித்து அறிந்திருக்கிறோம். ஆனால் கர்த்தர் கொடுத்த பதில் என்ன? **என் கிருபை உனக்குப் போதும்.** பலவீனத்தில் **என் பலம்** பூரணமாய் விளங்கும், என்பதே. இதை தொடர்ந்து பவுல் எழுதிய வாக்கியம் மிக முக்கியம். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் **பலவீனங்களைக் குறித்து** நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன், என்கிறார்.

பிரியமானவர்களே, முதுமையின் பலம் என்பது தேவ வல்லமை நம்மில் விளங்கும் பலம், முதுமையின் **பலவீனம்** என்பது நாம் முற்றுமாய் தேவன்மீது சார்ந்துகொள்ள நம்மை நடத்தும் ஆசான். முதுமையின் பலவீனம் என்பது நமது சுய பெலம் அற்றுபோய் தேவ வல்லமை நம்மில் பலமாக விளங்கும். அற்புத தருணங்கள், **ஆபிரகாம்** சாராள், **மோசே,** யோகவா, **காலேப்** என்ற பலருடைய வாழ்வு நமக்கு முன்பாக சாட்சியாக நிற்கிறது. **இளமை** எடுக்கும், **முதுமை** கொடுக்கும், **இளமை** அறிவைப் பெற்றுக்கொள்ளும், முதுமையோ பெற்ற அறிவில் ஞானத்தை விளங்கவைக்கும். இளமை பயிலும் காலம், **முதுமை** அனுபவத்தை அள்ளி வீசும் காலம். **இளமை** தன்னால் முடியும் என்று மார்தட்டும், **முதுமையோ** தேவ பெலத்தால் எல்லாம் முடியும் என்று முழங்கும்.

கரங்கள் நடுங்குகிறதா? தேவன் உங்கள் ஆத்துமாவை அதிகமாக உறுதிப்படுத்துகிறார். நீங்கள் எடுத்துவைக்கின்ற காலடிகள் தள்ளாடி **வேகம் குறைந்துவிட்டதா?** கர்த்தர் உங்கள் அருகில் **உங்களுடன் நடக்கிறார்.** உங்கள் **ஞாபகங்கள்** நினைவுகள் குறைந்து விட்டதா? உலகம் உங்களுக்கு Dementia என்று முத்திரை குத்தி இன்னமும் உங்கள் **ஞாபகங்களை மழுங்கடிக்கும்** அதற்கு இடமளிக்கக்கூடாது. ஏனெனில் நமது நினைவுகள் குன்றினாலும் தேவன் அருளிய வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் மங்கிவிடாது. உங்கள் கண்களின் பார்வை குறைந்து விட்டதா. **தைரியம் கொள்ளுங்கள்,** தேவனுடைய மகிமையை காணும்படி உங்கள் **மனக் கண்களைக்** கர்த்தர் பிரகாசிப்பிக்கிறார். தலைமுடி நரைத்து விட்டதா? அதை ஏன் மறைக்க வேண்டும். முதிர் வயதானவர்களின் மகிமை **அவர்கள் நரை என்கிறது** வேதம் (நீதி 20:29) நரைமுடி நமக்கு **மகிமையின் கிரீடம்.** பற்கள் தள்ளாடுகின்றனவா? அவற்றைப் பிடுங்கி எறிந்துவிட்டு சிறு குழந்தைகள்போல் **பற்கள் அற்ற** அழகான வாயினால் **கர்த்தரைப் பாடி துதியுங்கள்** அந்தக் துதியின் சத்தம் **தேவனை நிச்சயம் மகிழ்விக்கும்.**

முதிர் வயதினர் ஒரு குடும்பத்தில் வாழ்ந்திருப்பதை பலரும் பாரமாக நினைக்கின்றனர். ஆனால் அவர்களே குடும்பத்துக்கு அழகு. அவர்களது ஞானம் குடும்பத்தின் அஸ்த்திபாரத்திற்கு உரம். ஆலோசனைகள் குடும்பத்தின் அலங்காரம். அவர்களது அனுபவம் அடுத்த சந்ததிக்கு வழிகாட்டும் அம்புகுறி. ஆனால், இதை உணராத பிள்ளைகள் அம்மா, அப்பா **உங்களுக்கு ஒன்றும் விளங்காது,** என்று கூறி அடக்கி வைக்கின்றனர். இது கர்த்தருக்கு பிரியமற்ற காரியம்.

**முதுமை தேவாதி தேவனுடைய உண்மைத்துவான நடபடிக்கையின் ஜீவனுள்ள சாட்சி.**

உங்கள் வாழ்வை நீங்கள் திரும்பிப் பார்த்தால் என்ன சொல்வீர்கள். சிலர் வாழ்வைத்

தவறவிட்டதாக வருந்துவர் சிலர் வெற்றியாகக் காண்பர் சிலரோ இரண்டையும் உணருவதுண்டு. ஆனால் விசுவாசக் கண்களைத் திறந்து பார்த்தால் நமது வாழ்வில் ஒவ்வொரு பகுதியிலும் தேவனுடைய கரம் கூடவே இருந்து நம்மைத் தூக்கிச் சுமந்து வந்ததைக் காணலாம்.

இத்தனை வருடமாக நம்மை நடத்தினாரே, கர்த்தர் உண்மையுள்ளவரே அநாதியாய் நமக்காக தாம் வைத்திருந்த திட்டத்திற்கும் சித்தத்திற்கும் நேராக நம்மை வாழ்வில் தமது நாமத்தை மகிமைப்படுத்தினாரே, அவர் உண்மையுள்ளவரே, நாம் விழுந்தபோது தூக்கி நிறுத்தி தடுமாறியபோது தாங்கி நின்று தனிமையில் உறவாகி இப்படிச் சொல்லிக்கொண்டே போகாலாம்.

75வது வயதில் வாக்குப்பெற்ற ஆபிரகாம் தன் முதலாவது பிள்ளையை பெற்றெடுத்தது 106வது வயதில், ஆம் தேவனுடைய வாக்கு தவறவில்லை, துடிப்பும், மிடுக்கும் ராஜ குமாரனுக்குரிய பராக்கிரமும் நிறைந்த **மோசேயை** அல்ல. 80வயது நிறைந்த ஆடுகளை மேய்த்துக்கொண்டு வனாந்திரத்தில் நின்ற **மோசேதான்** கர்த்தருக்கு தேவைப்பட்டார்.

ஆபிரகாமுக்கு வாக்களித்தபடி எகிப்தின் அடிமைத்தனத்திருந்த தமது ஜனத்தின் மீட்பிற்கான வாக்கு நிறைவேறுவதற்கு மோசேயைக் கர்த்தர் 80 வயது வரைக்கும் காத்திருக்க வைத்தார்.

கானானுக்குள் வழிநடத்தி வந்து மோசே கட்டளையிட்டபடியெல்லாம் செய்த யோசுவாயை குறித்து வேதாமம் இப்படி சொல்லுகிறது. **யோசுவா** வயது சென்று முதிர்ந்தவனானபோது கர்த்தர் அவனை நோக்கி **நீ வயதுசென்றவனும் முதிர்ந்தவனுமானாய்,** சுதந்தரித்துக்கொள்ள வேண்டிய தேசம் இன்னும் மகாவிஸ்தாராமாயிருக்கிறது என்று சொல்லி கர்த்தர் யோசுவாவை அனுப்பினார் (யோசு, 13:1) தேசத்தைப் பங்கிட்டபோது **காலேப்** வந்த **இன்று நான் 85 வயதுள்ளவன்**, மோசே என்னை அனுப்புகின்ற நாளில் **எனக்கு இருந்த அந்தப் பெலன்** இந்நாள் வரைக்கும் எனக்கு இருக்கிறது என்று சொல்லி மலை நாட்டைத் தரும்படி கோட்டு வாங்கினார். மோசே காலேப்புக்கு வாக்களித்தபோது அவருக்கு வயது 40 இப்போது 85 வயதில் மலைநாட்டைக் கேட்டு வாங்கி அதைச் சுதந்தரித்துக்கொண்டார். முதுமை தடையா? தேவதிட்டமா?

**முதுமை இழப்பு அல்ல. அது தேவன் நமக்குத் வைத்திருக்கும் திட்டம்.**

**முதுமை** இழப்பு அல்ல. அது **பலவீனமும்** அல்ல. அதாவது **பலமற்ற நிலையும்** அல்ல. சற்று பலம் குறைவுபட்ட நிலையாயினும் தேவனுடைய வல்லமை தங்கும் பருவ காலம் அதுவேதான் முதிர் வயதினர் இளவயதினருக்கு **உளைச்சல் அல்ல.** இளவயதினருக்கு தேவன் வைத்திருக்கும் எல்லைக்கோடு, தேவன் நமது வாழ்வுக்குள் வருகின்ற நுழைவாயில். நமது பலவீனத்தில் தேவனுடைய பலம் விளங்கும்போது அதுவே தேவனுடைய வல்லமையின் சாட்சியாக நிமிர்ந்து நிற்கிறது.

நமது முதுகு **கூனிப்போகலாம்.** கால் **நடை தளர்ந்திடலாம்** கைவிரல்கள் **நடுக்கம்** காணலாம். இத்தனை இருந்தும் இன்னமும் நாம் ஜீவித்திருப்பது தேவனுடைய வல்லமையின் சாட்சியாக எழுந்து

பிரகாசிக்கிறது. நாம் தலைகுனிய வேண்டிய அவசியம் இல்லை. மேலே நோக்கிப் பார்த்து முன்னே செல்லுவோமாக அதன் தேவ திட்டம் வருத்தப்படுக்கையா? அதனைச் சாட்சி படுக்கையாக மாற்றிப்போட தேவ ஞானம் நமக்குள் இருக்கிறது என்பதை நாம் மறக்கக்கூடாது.

**மூத்தோர் தற்செயலானவர்கள் அல்ல.**

முதுமை தேவனுடைய திட்டம். முதுமையிலும் தேவனை நாம் மகிமைப்படுத்துவோம் என் தேவன் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் மேன்மையே அது. முதிர் வயதானவர்களின் மகிமை அவர்கள் நரை என்கிறது. நீதிமொழி (நீதி 20:29)

நமது ஒவ்வொரு நரைமுடியும் கர்த்தர் நம்முடன் நடந்ததன் சாட்சி, வாழ்வின் புயலிலும் பள்ளதாக்குகளிலும் கர்த்தர் நம்மைக் காத்துக்கொண்டதன் அடையாளம். இது இன்றைய இளைய தலைமுறையினருக்கும் சாட்சி. தோலின் ஒவ்வொரு சுருக்கமும் தேவன் நம்மில் வைத்திருக்கும் அழகு. அதுவே தேவனுக்கு **சத்தமின்றி மகிமை செலுத்தும்.**

**எலிசபேத்தும் சகரியாவும்** ஒரு பிள்ளைக்காக நீண்டகாலமாக விண்ணம் பண்ணியும். கிறிஸ்துவுக்கு முன்னோடியான **யோவான் ஸ்நானகனை** அவர்களுக்குப் பிள்ளையாகக் கொடுக்கின்ற தேவ திட்டம் அவர்களது முதிர் வயதில்தான் நிறைவேறியது. **சிமியோன்** அருளப்பட்ட வாக்குப்படி **கிறிஸ்துவைக் காணும் மட்டும்** அவர் மரணமடையவில்லை.

மானுவேலின் குமார்த்தியாகிய **அண்ணாள்.** ஏழு வருஷம் மாத்திரம் கணவனுடன் வாழ்ந்து விதவையாயிருந்த இவர் ஏறக்குறைய **84 வயதுவரைக்கு**ம் இரவும் பகலும் உபவாசித்து ஜெபம் பண்ணி, ஆராதனை செய்துகொண்டிருந்தார். எதுவும் வீணுக்கல்ல. இவரும் **இயேசுவைத் தன் முதிர்வயதில்** கண்டு **மகிழ்ந்திருந்தாள்** யோவான் தன் முதிர்வயதில் பத்மு தீவில் தனித்திராவிட்டால் இன்று நமக்கு **வெளிப்படுத்தல் விசேஷம்** என்ற புத்தகம் கிடைத்திருக்குமா?

இவர்கள் எல்லாருடைய மூப்பும் காரணமின்றியா நிகழ்ந்தது? இவர்களது மூப்பின் காலம் அர்த்தமற்றா காணப்பட்டது ?

**முதுமையில் விளங்கும் ஞானத்தின் அழகு**

அறிவு : இது மூளை சம்மந்தப்பட்டது. வாசிப்பு, பார்ப்பது, கேட்பது, படிப்பது இவை எல்லாமே நமது அறிவை வளர்க்கின்றன. ஆனால் **ஞானம்** என்பது ஆழமானது இது பெற்றுக்கொண்ட அறிவை வாழ்வில் செயற்பாட்டில் எப்படி நாம் வெளிப்படுத்துகிறோம் என்பதே ஞானம், நாம் கடவுள் இருக்கிறார் என்பதை நம்புகிறோம். ஆனால் கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (நீதி 1:7) என்கிறது வேதம். இந்த ஆரம்பம் வளர்ந்து, வாழ்வின் ஒவ்வொரு சோதனைகள், பாடுகளுக்கூடாகவும் அது ஆழமான புரிதலைத் தருகிறது. வயது முதிர முதிர ஏற்படுகின்ற அனுபவங்கள் முதுமையின் ஞானத்தின் அழகைப் பிரதிபலிக்கிறது. முதியவர்களை ஒதுக்கி வைக்கிறவர்கள் அந்த ஞான அழகை இழக்கிறார்கள்.

சாலெமோன் மகன் **ரெகோபெயாம்** ராஜாவானபோது மக்கள் இவனிடம் வந்து தங்கள் பாரங்களை இலகுவாக்கும்படி கேட்டபோது அவன் சரியாகவே நடந்துகொண்டான். தன் தகப்பனாகிய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவன் சமூகத்தில் நின்ற **முதியோரோடு** ஆலோசனை பண்ணி அவர்க ளிடம் யோசனை கேட்டான். அவர்களும் மக்களுடன் இணங்கிக்கொள்ளும்படி **நல் ஆலோசனை** கொடுத்தார்கள். ஆனால் அவனோ **அந்த ஆலோசனையைத் தள்ளிவிட்டு** தன்னுடன் இருந்த **வாலிபரோடே** ஆலோசனை பண்ணி மக்களுடைய பாரத்தை இன்னமும் அதிகரித்தான். இதன் பலன் என்ன? இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாக உடைந்தது.

நமது வீடுகளில் இன்னும் வாழ்ந்திருக்கும் மூத்தோர் கூறும் காரியங்களை இன்றைய தலைமுறையினரக்குக் கேலியாக மடைமைத்தனமாகக் கூட தெரியலாம். ஆனால் முதுமைக்குள் விளங்கும் ஞானத்தில் அழகை அசட்டை பண்ணுவது குடும்பத்துகே ஆபத்தை விளைவிக்காது என்று சொல்ல முடியாது.

பிரியமானவர்களே, 60ஐ தாண்டியும் நாம் இன்னமும் சுவாசிக்கிறோம் என்றால். கர்த்தர் இன்னமும் நம்மில் வைத்திருக்கும் நோக்கம் நிறைவேறி முடியவில்லை என்பதுதான் உண்மை. எத்தனையோ பேர்கள் உலகைவிட்டுக் கடந்துபோய் விட்டபோதும் **இன்னமும் தேவன் நம்மை உயிருடன் வைத்திருக்கிறார்** என்றால் இவருகாய் நாம் செய்யவேண்டிய பணிகள் இன்னமும் உண்டு என்பதை நாம் உணரவேண்டும். வியாதி தாக்கலாம். மூப்பினால் பெலன் குன்றி யிருக்கலாம். இனி முடியாது என்ற நிலைகூட உருவாகலாம். சத்துரு நம்மை எப்படியாகிலும் தாக்க எத்தனிக்கலாம். எதுவும் இருக்கட்டும் ஆனால் **நம்மோடிருக்கிறவர் பெரியவர்**

கர்த்தருடைய நோக்கம் நம் பலவீனத்தில்தான் மேன்மையாக விளங்கும். அவருடைய வாக்கு ஒருபோரும் பொய்யாகாது.

தாயின் வயிற்றில் தோன்றியது முதல் உங்களை ஏந்தி தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் **உங்களைத் தாங்கினேன்.** உங்கள் **முதிர்வயதுவரைக்கும்** நான் அப்படி செய்வேன். **நரை வயது மட்டும்** நான் உங்களை தாங்குவேன். நான் அப்படிச்செய்துவந்தேன். **இனிமேலும் நான் ஏந்துவேன்.** நான் சுமப்பேன் (ஏசா 3:4) என்று உரைத்த நமது ஆண்டவர் பொய்யுரையாதவர்.

முதுமை தேவ ஈவு என்பதற்கு இன்னும் ஏராளமானள காரணங்கள் உண்டு. உலகம் ஆயிரம் சொல்லும், நம்மைச் சோர்வடையச்செய்யும் . ஆனால் நமக்குள் இருப்பவர் பெரியாவர். நமது மரணத்தின் கடைசி விநாடியிலும் அவரே நம்முடன் கூடவே இருப்பவர். பின்னர் நாம் ஏன் மனவேதனைப்பட வேண்டும். பிள்ளைகள் கைவிடலாம், சமுதாயம் நம்மை கீழாக நோக்கி தள்ளிவைக்கலாம், சபை நம்மைக் கவனிக்காது போகலாம். ஆனால் நாம் தேவனுக்கு பிள்ளைகள் .

முதியவர்களானலும் நாம் அவருடைய கரத்தில் இருக்கிறோம். இந்த ஆசீர்வாதமான முதுமையை நாம் கர்த்தருடன் சேர்ந்து கொண்டாடுவோமாக.

# ஆவிக்குரிய வாழ்க்கை

ஒரு விசுவாசி **வசதியாக** வாழலாம். ஆனால் **ஆடம்பரமாக** வாழக்கூடாது.

**சுகபோகமாய் வாழ்கிறவன் உயிரோடே செத்தவன்**

வாழும் இந்த **ஒரே ஒரு வாழ்க்கையை கர்த்தருக்கென்று வாழுவோம்.**

அப்போதுதான் **கர்த்தருக்குள் மரித்தான்** என்று கூறமுடியும்

NOVEMBER- 2025

Printed Book (Periodical)

RNI Reg. No. TNBIL/2016/70171

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**